Reg istered as a News Paper in Sri Lanka  பக்கங்கள் 06  விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 02  ஏப்ரல்  ( 27 - 04 - 1991 )  சனிக்கிழமை  ஓசை: 68

## ஆசிரியர் சம்பள உயர்வு; ஆராயப்படுகிறது

(கொழும்பு)

ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்படுகிறது. நிர்வாக உத்தியோகத்தரின் வருடாந்தச் சம்பளத்தை ரூபா 1 லட்சத்து 8 ஆயிரமாக உயர்த்துவதற்குச் சிபார்சுசெய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சிபார்சுகள் அங்கீகாரத்துக்காகப் பொதுநிர்வாக அமைச்சுக்கும், திறைசேரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. (6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் மோதல் ஆரம்பித்த வேளையில்

# காவலூரிலும் கடும் மோதல்

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகிய முப்படைகளும் இணைந்து ஊர்காவற்றுறை முகாமை அண்டிய பகுதிகளில பெரும் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியதைத் தொடர்ந்து அப்பகுதியில் கடும் மோதல் மூண்டது. நேற்று முன்தினம் ஆரம்பித்த இம் மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மூன்று விடுதலைப்புலிகள் வீர மரணமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை காரைநகரில் தாக்குதலைஆரபபித்த அதேவேளை ஊர்காவற்றுறைப் பகுதியிலும் இத் தாக்குதல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை 4 மணியளவில் ஊர்காவற்றுறையில் உள்ள சின்னமூளாய், பொன்னாச்சி கடைச்சந்தி, நாரந்தனை ஆகிய இராணுவக் காவலரண்களில் இருந்து சின்னமூளாய், பொன்னாச்சிகடை, நாரந்தனை ஆகிய இடங்களிலுள்ள விடுதலைப்புலிகளின் காவல் அரண்களை நோக்கி ஒரு செயின் கவசவாகனம், நான்கு ட்ரக் வண்டிகள் சகிதம் சிறிலங்கா இராணுவத்தினர் (6ஆம் பக்கம் பார்க்க)

## பாலம் தகர்பபு

(யாழ்ப்பாணம்)

வலந்தலைச் சந்தியில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை 9·25 மணியளவில் பொன்னாலைச் சந்திப் பக்கமாகவுள்ள மூன்றாவது பாலத்தை கவசவாகனமொன்றில் வந்து வெடிமருந்து வைத்து தகர்த்து விட்டுச் சென்றனர்.

## தீவுப்பகுதி மோதலில் ஆறு இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மூண்ட சண்டையில் ஆறு இராணுவத்தினர் இறந்ததாகவும், பலர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

## இரண்டாம் நாளாகவும் காரைநகரில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகள் நேற்றும் இரண்டாவது நாளாக தொடர்வதால் பெருமளவில் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதுடன் பல நூற்றுக்கணக்கான மக்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளனர்.

படையினரின் நடவடிக்கைகளால் இந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் வெளியேறியுள்ளனர். மக்கள் வெளியேறிய பகுதிகளில் ( 6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ஊர்காவற்றுறையில் நால்வர்

ஊர்காவற்துறையில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கார்த்திக் (இராஜேஸ்வரன் சந்திரகுமார், சங்குவேலி தெற்கு சண்டிலிப்பாய்), ராசிக (நாகேஸ்வரக் குருக்கள் மதுசூதனன் கந்தசாமி கோவிலடி இணுவில்), மனோச் (அழகன் கருணாநிதி, ஒவாப்பேட்ட தோட்டம் மலையகம்) ஆகியோர் வீர மரணமடைந்துள்ளனர்.

இம்மோதலில்காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த போராளி குட்டி மாணிக்கம் ரவீந்திரன் புத்தூர் மேற்கு) நேற்றிரவு வீரமரணமடைந்துள்ளார்.

### லெப். தியாகு

குப்பிளான் பகுதியில் நேற்றுமாலை 4.00 மணியளவில ஏற்பட்ட மோதலில் லெப் தியாகு (அ. தர்மராசா குச்சவெளி, திருமலை) வீரமரணமடைந்தார.

இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொளகின்றனர்.

## அதிகளவு பதநீர் உற்பத்தியாளருக்கு பரிசு

(நமதுநிருபர்)

இந்தவருடம் அதிகளவு பதநீரை உற்பத்திசெய்த பனைத் தொழில வல்லுநர்களுக்கு மேதினத்தன்று வருதுகள வழங்கிக் கௌரவிக்கப் பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம் முயற்சிகளை மேற் கொண்டுள்ளது.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் சுய பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக பனை வெலலம், பனஞ்சீனி உற்பத்திகளை அதிகரிக்கும் முகமாக பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பேராதரவு காட்டிய பதநீர் உற்பத்தியாளரை வருடா வரு (6ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய நெருக்கடிக்கு சுதந்திரக்கட்சியே காரணம்

### - பிரேமதாசா

(கண்டி)

இலங்கையில் இதற்கு முன்னர் ஆட்சி செய்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின்பற்றிய நடைமுறைக்குப் பொருந்தாத கொள்கைகளினாலேதான் வடபகுதியிலும், கிழக்கிலும் இப்போது சிக்கல் ஏற்பட்டு விட்டது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியிருக்கிறார்.

சுதந்திரக் கட்சி அரசாங்கம் பின்பற்றிய மொழிக் கொள்கை தமிழர்களைத் தனிமைப்படுத்தி அவர்களை ஆயுதந் தூக்க வேண்டிய நிலைக்குத் தள்ளி விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய மாகாணத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, இந்த நிலைமைக்குப் பரிகாரம் காண தமது அரசு முயலுவதாகக் கூறினார்.

## வன்னியில் துரித வேகத்தில் மேதின ஏற்பாடுகள்

(நமது நிருபர்)

வன்னிப் பிராந்தியமான முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் மாவட்ட மட்டத்திலான மேதின முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றன. மாபெரும் மேதின எழுச்சி நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளன. மாபெரும் பேரணி பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் நான்கு மணிக்கு பொதுக்கூட்டமும், ஏழு மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் நிகழ்வு நடைபெறும் இடங்கள்:

கிளிநொச்சி மாவட்டத்தில் கந்தசுவாமி கோயிலடிச் சந்தியில் பேரணி ஆரம்பமாகி கிளி/மத்திய மகா வித்தியாலயத்தைச் சென்றடையும். அங்கு பொதுக் கூட்டமும், கலை நிகழ்வுகளும் நடைபெறும். முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சிவன் (6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஐந்து தமிழர் இராணுவத்தால் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் மூன்று தமிழ்ப் பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் சரடியனாறு இராணுவமுகாமில் இருந்து இலுப்படிச்சேனை என்னும் இடத்திற்குச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் ஆதரவாளரான திரு. இரத்தினம் (வயது 40 இலுப்படிச்சேனை) என்பவரைச் சுட்டுக் கொன்றதுடன் சுப்பு (வயது 45 கரடியனாறு) என்பவரைக் கைது செய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இதேவேளை ஊறணிச் சந்தி (6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் இராணுவம் மீது கிளைமோர்த் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நேற்றுக்காலை 8 மணியளவில் படுவான்கரைப்பகுதியிலுள்ள மணல்பிட்டிஇராணுவ முகாமில் இருந்து கொக்கட்டிச் சோலைக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன சேத எண்ணிக்கை விபரம் கிடைக்கவில்லை.

## “மேதின அறைகூவல்”

(யாழ்ப்பாணம்)

மேதினத்தை முன்னிட்டு பல்வேறு பகுதிகளிலும் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் நடத்தப் (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் மீது சிறிலங்கா கடற்படை சூடு

(சென்னை)

கச்சதீவிற்கு அருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழ மீனவர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரால் சுடப்பட்டுள்ளார் என்றும் சூடுபட்டவர் காயங்களுடன் இராமேஸ்வரம் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ராமேஸ்வரம் பகுதியில் இருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் கச்சதீவு அருகே சிறி (6ஆம் பக்கம் பார்க்க)

## புகழுடல்கள் அஞ்சலிக்கு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப்பகுதியில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவததுடனான மோதலில்காயமடைந்தவீரவேங்கை குட்டி (மாணிக்கம் ரவீந்திரன் புத்தூர்மேற்கு) நேற்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

நேற்றையதினம் குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் லெப் தியாகு (அ. தர்மராசா குச்சவெளி, திருமலை) வீரமரணத்தைத்தழுவிக்கொண்டார்

இவ்விரு வேங்கைகளினதும் புகழுடல்கள் இன்றுகாலை புத்தூர் - வேம்பிராயில் பொதுமக்கள்அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்படும். அங்கிருந்து கோப்பாய் மாவீரா மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகும்.

## வரி விளம்பரம்

### பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், பேத்தல், செம்பு, பித்தளை, ரொழித்தின், சீமெந்து உறைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட் (இலங்கை வங்கி முன் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

(B-2301)

## சிறுமி காலை இழந்தார்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் பூந்தோட்டம் பகுதியில் இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கி பத்து வயதுச் சிறுமியான செல்வராசா சாந்தினி தனது இடதுகாலை இழந்துள்ளார்.

## அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயில்நெறி 1990 - 91

தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில் நெறிக்கு 101 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது சொந்த முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பதவிக்கான ஆவணங்களுடன் பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளைக்கு 1991. 04. 29 ஆம் திகதி திங்கட் கிழமை மு. ப. 9 . 00 மணிக்கு நேரடியாகச் சமுகமளிக்கவும்.

மேற்கூறப்பட்ட திகதியில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில்நெறியின் தொடக்க விழா 1991. 05. 01 புதன் கிழமை முற்பகல் 8 . 00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

25. 04. 91

பதிவாளர்

(ம 2419)

## 5ஆம் ஆண்டு வீரஅஞ்சலி



**கடற்புலி தெய்வா**

(ஐயாத்துரை சிவநாதன் — மாதகல்)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 18 - 10 - 1964 | 27-'4-986 |

மாதகல் வேங்கையாய்த் திகழ்ந்தாய் தெய்வா - நீ
செய்த சாதனைகளோ அளப்பரியது
தமிழீழத்தாயைக் காக்கவே புறப்பட்டாய் தெய்வா-நீ
எதிரிகளை ஈழ மண்ணிலிருந்து விரட்டவே
புறப்பட்டாய்
இரண்டு ஆண்டுகள் தீரமுடன் போராடினாய் தெய்வா-நீ
மக்களைக் காக்கவே போராடினாய்
கடற்படைப் பொறுப்பாளராக வீரமுடன்
செயற்பட்டாய் தெய்வா - நீ
சித்திரைச் சீரினிலே ஈழமண்ணை சென்று விடுவேன்
என உறுதியுடன் புறப்பட்டாய்
ஈழமண்ணை நெருங்கும் வேளையிலே பதினொரு
வேங்கைகளுடன் தெய்வா - நீ
எதிரி கணையால் களப்பலி ஆகினாய்
உன் உடல் தான் அன்று அழிந்தது தெய்வா - உன்
தியாக உயிர் எம்மை விட்டு அகலவில்லை
உன் குடும்பமே தியாக இல்லம் தெய்வா - உன்
வீரப் பாதையைத் தொடர்ந்திடுவோம் தெய்வா!

- குடும்பத்தினர்

மாதகல். (R - 1343)

## நினைவு கூருகின்றோம்...

**1991- 04- 27**



**அர்ச்சுனா**
(பொன்னுத்துரை மித்திரா
- மட்டக்களப்பு)



**கப்டன் அலெக்ஸ்**
கந்தசாமி நித்தியானந்தன்
நல்லூர்)

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலினால் வீரமரணமடைந்த

**கப்டன் அலெக்ஸ்** (கந்தசாமி நித்தியானந்தன் - நல்லூர்)

**லெப். கபில்** (இ. பாலேந்திரன் - திருமலை)

**அர்ச்சுனா** (பொன்னுத்துரை மித்திரா - மட்டக்களப்பு)

**2ஆம் லெப். ரங்கா** (சி. ராஜ்குமார் - வல்வெட்டித்துறை)

**2ஆம் லெப். துரைக்குட்டி** (சிவகுருநாதன் இராசவடிவேல் - வல்வெட்டித்துறை)

**அலெக்ஸ்** (திருமலை)

**ரஹீம்** (திருமலை)

**நளினன்** (சச்சிதானந்தன் பிரதாபன் - வட்டுக்கோட்டை)

**கார்த்திக்** (நடராசா கார்த்திகேயன் - வல்வெட்டித்துறை)

**தெய்வா** (ஐயாத்துரை சிவநாதன் - மாதகல்)

**காந்தன்** (சிவசுந்தரம் விஜயதாஸ் - வல்வெட்டித்துறை)

**ஜேசு** (பத்மநாதபிள்ளை ரவீந்திரா - அளவெட்டி)

1987 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் வீரமரணமடைந்த

**ராஜன்** (ஆறுமுகம் ரட்ணராஜா - யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு கப்புதுவில் இந்தியப் படையினருடனான மோதலின் போது வீரமரணமடைந்த

**கப்டன் மோகன் மாஸ்ரர்** (முருகேசு ஜெயகுமார்-சோழங்கன் கரணவாய் தெற்கு)

**2ஆம் லெப். முரளி / சாள்ஸ்** (கந்தவனம் தவக்குமார் - கரணவாய் தெற்கு)

**பட்சம் ஜவாகர்** (கதிர்காமநாதன் ராகவன் - கரவெட்டி)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளால் வெட்டிக் கொல்லப்பட்ட

**காளி** (திருப்பழுகாமம்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**-விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-2338)

# 52-60 வீதமான மாணவரே பரீட்சை எழுதுகின்றனர்

வடக்குக் கிழக்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விசேட உயர்தரப் பரீட்சைக்கு 52 முதல் 60 சத வீதமான மாணவர்கள் தோற்றுவதாக தெரியவருகிறது.

செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமான மேற்படி விசேட உயர்தரப் பரீட்சைக்கு வட பகுதியில் தோற்றுவதற்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களில் மேற்படி வீதமானமாணவர்கள் பரீட்சை எழுதுவதை அவதானிக்க முடிந்தது.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் மோகன் மாஸ்ரர்

(முருகேசு ஜெயக்குமார்)

| தாயின் மடியில்: | மண்ணின் விடிவிற்காக: |
| --- | --- |
| 03-05-1962 | 27-04-1988 |

உப்பங் காற்றே!
எங்கும் பரப்புக;
''உப்பங் கழியின் அருகே,
மோகன் மாஸ்ரர்
உதிரம் சிந்தி
மூன்றாண்டாயின!
கடலின் உப்புக் கரையும் வரையும்
கனவு ஈழம் அமைந்த பின்னரும்
உமது உயிரில்... உணர்வில்....
கலந்திருப்பர்.''

இவருடன் வீரமரணமடைந்த லெப்டினன்ட் முரளி, வீரவேங்கை பட்சம் ஆகியோருக்கு எமது வீர அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அக்கா, தம்பி,
நண்பர்கள்.

''மோகன் மாஸ்டர் வீதி''
சோளங்கன்,
கரணவாய் தெற்கு.

(R/1349)

## 31-ம நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10-03-1932 | 28-03-1991 |

### சங்காப்பிள்ளை திருச்சிற்றம்பலம்

1975 ஆம் ஆண்டு முதல் எமது சனசமூக நிலைய போஷகராக கடமையாற்றி இறைவனடி சேர்ந்த அமரர் ச. திருச்சிற்றம்பலம் அவர்களுக்கு எமது அஞ்சலிக .

நாயன்மார்கட்டு சனசமூகநிலையம்

(R-2422)

## தொழில் துறைசார் போட்டியில்

# யாழ். நகர்ப் பகுதியில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

மேதினத்தையொட்டி தமிழீழ ஆய்வு நிறுவனம் நடாத்திய தொழில் துறை சார்ந்த சில போட்டிகளில் யாழ். நகரப் பிரிவில் வெற்றிபெற்றவர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

வள்ளம் தாங்குதல் போட்டியில் முதலாம் இடத்தை நாவாந்துறையைச் சேர்ந்த நீ. அன்ரனிக்குயின், அ. அன்ரனிராஜா, அ. அன்ரனிக் கொலன் ஆகியோரும் இரண்டாம் இடத்தை நாவாந்துறையைச்சேர்ந்த ம.சகாயநாதன், ம. டொமினிக், அ. அல்பிரட் ஆகியோரும் மூன்றாம் இடத்தை நாவாந்துறையைச் சேர்ந்த ஞா. செபமாலைதாஸ், சா. சத்தியசீலன், ச. சுரேஸ்ஆகியோரும் பாய்வள்ள ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை கொழும்புத்துறையைச்சேர்ந்த எஸ் மோகனராஜ், கே சின்னத்துரை ஆகியாரும் இரண்டாம் இடத்தைக் குருநகரைச் சேர்ந்த எஸ். யோன்ரவி, சின்னத்துரை, உதயன் ஆகியோரும் மூன்றாம் இடத்தைக் குருநகரைச்சேர்ந்த அ.யூலியஸ், ஜே. சிம்மா ஆகியோரும் கயிறு திரித்தல் போட்டியில் முதலாம் இடத்தை கொழும்புத்துறையைச் சேர்ந்த க. கலாரஞ்சனி, க. கலாவாணி, க. கலாநாயகி ஆகியோரும் இரண்டாம் இடத்தைக் கொழும்புத்துறையைச் சேர்ந்த வீ சத்தியதேவி, வீ. சலாதேவி, ஜெயராணி ஆகியோரும் மூன்றாம் இடத்தைக் கொழும்புத்துறையைச் சேர்ந்த நீ. நிர்மலா, ப. விஜிதா, ஐ சந்திரமதி ஆகியோரும் தும்புத்தடி கட்டுதல் போட்டியில் முதலாம் இடத்தைக் கொழும்புத்துறையைச் சேர்ந்த க. சிறிமோகனராஜாவும் இரண்டாம் இடத்தைக் கொழும்புத்துறையைச் சேர்ந்த செ. மனோசங்கரும் மூன்றாம் இடத்தைக்கொழும்புத்துறையைச் சேர்ந்த பா. லசந்தராஜாவும்கிடுகுபின்னல் போட்டியில் முதலாம் இடத்தை வீ. சத்தியதேவியும் இரண்டாம் இடத்தை க. கமலாதேவியும் மூன்றாம் இடத்தை க.லோகேஸ்வரியும் பதநீர் இறக்கும் போட்டியில் வ சுந்தரம் முதலாம்இடத்தையும் வ. சண்முகலிங்கம் இரண்டாம் இடத்தையும் வ. தெய்வேந்திரம் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்

## ஊர்காவற்றுறையில் ராணுவத்தினருடன்மோதல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பகுதியில் நேற்று முன்தினம் முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல் நிகழ்ந்தது. நான்கு பொம்பர்கள்,இரண்டு ஹெலி கொப்டர்கள் என்பன வானில் வட்டமிட்டுத் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்க இராணுவத்தினர் கரம்பன், சின்னமீளாய் நோக்கி நகர்ந்தனர் இம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் அறியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கைகள் மூவர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

## மேதினப் பேரணியில் தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சிங்களப் பேரினவாதஅரசுதமிழினத்திற்கு எதிராகப் பிரகடனப்படுத்திய யுத்தத்தையும் தமிழர் கல்விக்கெதிரான ஒடுக்குமுறையையும் கண்டிக்க தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே ஒன்றுபட்ட தமிழ்த் தொழிலாளர் வர்க்கம் தனது ஆதரவினைத் தெரிவிக்கின்றது என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்படும் மேதினப் பேரணியில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த மகாசிவத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

தமிழ்த்தொழிலாளர்களின் ஒற்றுமையை உலகுக்குணர்த்த சகல தமிழ்த் தொழிற் சங்கங்களையும் இப் பேரணியில் இணையுமாறும் இ. த. ஆ சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் ஆசிரியர் சங்க நிர்வாக ஆண்டிறுதிப் பொதுக்கூட்டம் வரும் திங்கட்கிழமை (29.4.91) காலை 10.00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சகல உ.அ. அ. பிரிவுகளைச் சேர்ந்த புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பழைய சங்க செயற்குழு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## கொர்பசேவுக்கு ஆதரவு

(மொஸ்கோ)

சோவியத் யூனியன் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்காக ஜனாதிபதி கொர்பசேவ் எடுத்த நடவடிக்கைகளுக்கு அவரது எதிர்ப்புப் போட்டியாளர் போரிஸ் எல்சின் உட்பட ஒன்பது குடியரசுத் தலைவர்களின் ஆதரவையும் பெற்றுள்ளார் என டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பதவி விலகினர்

(யாழ்ப்பாணம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இருவர் பதவி விலகியுள்ளனர். தேசிய இணைப்பாளராக பணி புரிந்த செல்வி றஞ்சினி சிவலோகநாதன் மாகாணப் பணிப்பாளராகப் பணிபுரிந்த திரு. சிவலோகநாதன் ஆகிய இருவருமே சுவிலகியவர்களாவர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

### கப்டன் அலெக்ஸ்

(கநதசாமி - நித்தியானந்தன்)
(யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

| நாயின் மடியில்: | நாயக விடிவில்: |
| --- | --- |
| 31 03-1958 | 27-04-1986 |

### வீரவேங்கை நளின்

(சச்சிதானந்தன் - பிரதாபன்)
(யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்)
வட்டுக்கோட்டை. யாழ்ப்பாணம்.

| தாயின் மடியில்: | நாயக விடிவில்: |
| --- | --- |
| 04-12-1963 | 27-04-1986 |

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

### வீரவேங்கை புவி (பொட்ஸ்)

(சேதுநாயகம் - ரவீந்திரராசா)
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்)
புலோலி, பருத்தித்துறை

| தாயின் மடியில்: | நாயக விடிவில்: |
| --- | --- |
| 03-08-1965 | 16-04-1984 |

''பல்கலைக்கழகம் புகுந்தும் பட்டம் பதவியை எதிர்பாராது அடிமைத் தளையில் தமிழ்த்தாய் சிக்கியிருப்பதைக் கண்டு வீறுகொண்டெழுந்து தம்முயிரை அர்ப்பணித்த வீர மறவர்களே உங்களிற்கு எங்கள் நினைவு அஞ்சலிகள் ''

மறுமலர்ச்சிக் கழகம்
யாழ். பல்கலைக்கழகம்.

(R-1351)

## வேலைவாய்ப்பு

வளர்ந்துவரும் சிவில் - பொறியியல்துறை நிறுவனமொன்றிற்கு பின்வரும் பதவிகட்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(1) சிவில் பொறியியலாளர்கள்
(2) சிவில்துறைசார் படவரைஞர்கள்
(3) பொது அலுவலக நிர்வாகி

5 வருடத்திற்கு குறையாத முன்னனுபவம் இருக்கவேண்டும். தகுதியானவர்கள் 10-05-91 க்கு முன் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்
விளம்பர இலக்கம் 116,
மே. பா. ஈழநாதம்,
31. மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.


## வெளிநாட்டவருக்கு அடையாள அட்டை

(குவைத்)

குவைத்திலுள்ள சகல வெளி நாட்டவர்களும் தங்களது பெயர்களை பதிவு செய்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என குவைத்திய அரசாங்கம் கேட்டுக் கொள்கிறது.

இதே நேரம் கடந்த வருடம் ஒகஸ்ட் 2 ஆம் திகதிக்குப் பின்னர் குவைத்தை விட்டு வெளியேறிச் சென்ற வெளி நாட்டவர்கள், தொழிலாளர் தேவை பற்றி குவைத் அரசாங்கம் முடிவெடுக்கும் வரை திரும்பிவர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## விஞ்ஞான பீட பரீட்சைகள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விஞ்ஞானபீட முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை 91 4.29ஆம் திகதி முதல்வருட பரீட்சையுடன் ஆரம்பமாகி மற்றைய வருட பரீட்சைகளும் தொடர்ந்து நடைபெறும். தற்போதைய நாட்டு நிலைக்காகப் பரீட்சைகள் பின்போடப்படவில்லை. விஞ்ஞான பீட மாணவர்கள் இதனை அவதானிக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(-2432)

## றேடியன்ற் கல்வி நிலையம்

புங்கன்குளம் - அரியாலை.

**91 பிரிவு PHYSICS**

By திரு. கலாமணி

**PAPER CLASS**

ஆரம்பமாக உள்ளது. முடியாத பாடத் திட்டத்தை மாணவரின் வேண்டுதலின் பேரில் பகுதிகள் தனிதனியாக கற்பிக்கப்படும்.

ஆரம்பம் 30-4-91 காலை 6 30 மணி

(R. 1356)


## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 15ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக வ. சிறிதரனும், உபதலைவராக ஜே. ஏ. அகஸ்ரீனும், இணைச்செயலாளர்களாக நீ. மயில்வாகனம், எஸ். கலாராஜ் ஆகியோரும் பொருளாளராக என். சகாயநாதன், உபபொருளாளராக தி. சிவஞானரட்ணம் ஆகியோரும் மேலும் 17 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.


## வேகமாக விற்பனையாகின்றது!

**S. L. E. A., SLPS**

பரீட்சைகளுக்கு ஏற்ற

**"பொதுஉளச்சார்பும் கல்வி முகாமைத்துவமும்"**

C.V.குணசேகரம் (B. A) விலை ரூ. 39-50

★ பொதுஉளச்சார்பு
★ பொது அறிவு கிரகித்தல்
★ விடய ஆய்வு

அண்மையில் நடைபெற்ற S-L-E-A.S பரீட்சை வினாத்தாள்களை உள்ளடக்கியது.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(R-2415)


## லங்காசிறியில் கடிதம் இல்லை

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றிற்கு வெளிநாட்டு ஸ்தாபனங்களால் அனுப்பி வைக்கப்பட்ட புனர்வாழ்வு பொருள்களோ இந்த முறை வடபகுதிக்கு வரும் லங்கா சிறியில் கொண்டுவரப் படும் என யாழ் கச்சேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் லங்காசிறி கப்பலில் கடிதப்பொதி வராது எனவும் கூறியுள்ளனர். (லோ)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை. வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**91** மீட்டல்
SAT. & SUN.
ஆரம்பம்:
28. 04. 1991
(காலை 8-00 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

★ பொருளியல் — திரு. கலாகரன்
★ வர்த்தகம் — திரு. தேவராஜன்
★ கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
★ அளவையியல் — திரு. சுப்பிரமணியம்
★ இந்து நாகரிகம் / இந்து சமயம் — திரு. காரை. சுந்தரம்பிள்ளை
★ தமிழ் — திரு. குழந்தை
★ புவியியல் — திரு. குணராஜா
★ சரித்திரம் — திரு. விஜயன்

மு. குறிப்பு: (1) அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(2) கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

(B. 2425)

## A/L 90

பொருளியல் மாணவர்களே!
வெளிவந்துவிட்டது!

**"பணம்"** விலை ரூபா: 35/-

1984 – 1990 வரையிலான வினாக்களையும் விடைகளையும் உள்ளடக்கியுள்ளது
அத்துடன்
★ பண நிரம்பல் ★ பணத்தின் தொழிற்பாடு
★ பண வீக்கம் ★ பணச்சுருக்கம்
★ விலைச்சுட்டெண் ஆகிய விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

**"வங்கியியல்"** விலை ரூபா 12-50
(சிறப்பாக இலங்கை பற்றியது)

ஆசிரியர் திரு. மா. சின்னத்தம்பி

மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு:
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
1481, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(R-2414)


## நாற்று உற்பத்தி திட்டம்

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டநிதியிலிருந்து யாழ். மாவட்ட செயலகத்தால் வனவள திணைக்களத்துக்கென ஒதுக்கப்பட்ட நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா நிதியிலிருந்து வடமராட்சியில் உள்ள மணற்காடு பகுதியில் வனவள மரங்களுக்கான நாற்று உற்பத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாற்றுக்களைக் கொண்டு அப்பகுதியில் மிகப் பெருமளவிலான வனவாக்கற் திட்டம் ஒன்று நடைமுறையில் இடப்படும் எனவும் கூறப்பட்டது. (லோ)


## தேடப்படுகிறார்

**ரமேஷ்**

கண்டாவில் இருக்கும் மாமா மாமி தங்கள் மருமகன் ரமேஷ் துரைசிங்கம் எங்கே இருக்கின்றார் என்பதை தெரிவிக்குமாறு வேண்டுகிறார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
N. மகாதேவா,
1251. King Street west
APT. 1201, Toronto Ontario,
M6K 1G7, Canada.

(R- 1355)

## தேவை

★ உட்புற படப்பிடிப்பாளர்கள்.
★ புகைப்பட பிரதிகள் கழுவுதல்

போன்ற பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முற்குறிப்பு

★ விண்ணப்பதாரர் விளம்பர இலக்கத்தை தவறாது காகித உறையில் எழுதவும்.
★ புகைப்படத் தொழிலில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம்,
★ இத்துறை சார்ந்த தகைமைச் சான்றிதழ்கள்
★ விண்ணப்பங்கள் யாவும் 31-04-91 முதல் ஈழநாதம் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
★ ஊதியம் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

**விளம்பர இல. 115**
மே.|பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(B-2423)

## யூனிவேர்சல்

**பழைய மாணவர் கலந்துரையாடல்**

*எமது கல்வி நிறுவனத்தின் பழைய மாணவ, மாணவிகள் வருகின்ற 29-04-91 (திங்கள்) பி. பகல் 4-30 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளவும்.*

நிர்வாக இயக்குனர்
யூனிவேர்சல்
சுந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
(R- 2427)


## மீண்டும் வந்தாறுமூலையில்

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கிலங்கை பல்கலைக்கழக வளாகம் கடந்த பத்து மாத கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் பழைய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. அத்துடன் பழைய மாணவர்களுக்கான செய்முறை வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

### ❋ சிந்தனைக்கு ❋

சட்டத்தை மக்கள் மதிக்க வேண்டுமென்று விரும்பினால், முதலில் மதிப்புக்குரியதாக சட்டத்தை ஆக்கவேண்டும்.
— சேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 27-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் :2208
த.பெ.எண்: 05


## சட்டமீறல்கள்

இலங்கை பூராகவும், சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. ''பயங்கரவாத நடவடிக்கைகள்'' அதிகரித்து விட்டன. இதனை எதிர்த்து மக்களைப் பாதுகாப்பதற்கும் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் அரசாங்கமும், ஆயுதப்படையினரும் போராடி வருகின்றார்கள். சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்காக ஆயுதப்படையினருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதே சிறிலங்கா அரசாங்கத்தின் இன்றைய நிலையாகும்.

ஆயுதப்படையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களினால் பல்லாயிரக்கணக்கில் சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடின்றி ஆயுதப்படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். படுகொலை செய்தவர்களுக்கு தேசிய வீரர்கள் என்ற கௌரவமும், பாராட்டும் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. அதேவேளை தமக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களைவிட அதற்கு மேலாலும் சென்று ஆயுதப்படையினர் மேற்கொண்ட படுகொலைகளுக்கும் சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டமையும், சிலவேளை அக்கொலைகள் மறைக்கப்பட்டமையும் உண்டு. அதாவது சட்டம் ஒழுங்கைப் பேண ஆயுதப்படையினர் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டதும் உண்டு.

அதேவேளை சுதந்திரம் வேண்டிப் போராடுபவர்கள் அரசின் சட்ட திட்டங்களுக்கு எதிராகவே போராடுகின்றார்கள். அதாவது அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்கு முறைச் சட்டங்களுக்கு எதிரானதே அவர்கள் போராட்டமாகும்.

இந்நிலையில், போராளிகள் ஏன் சட்ட திட்டங்களை மீறுகின்றார்கள் என்பதை அறிந்து சட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளை அரசாங்கம் தீர்வு காணாமல், ஆயுதப்படையினருக்கும், காடையர் குழுக்களுக்கும் விசேட சட்டங்கள் மூலம் பாதுகாப்பு வழங்கி அவர்கள் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றது.

சட்டம் என்பது சகலருக்கும் பொதுவானது. சட்டத்தை ஆக்குபவரும் அதற்குக் கட்டுப்பட்டுத்தான் ஆதல் வேண்டும். ஆனால், சிறிலங்காவில் இன்று அவ்வாறானதொரு நிலை இல்லை. மேலும், சட்டங்கள் தனியாக எழுத்து மூலம் மட்டும் உள்ளவையல்ல. மரபு வழியான பல சட்டங்களும் உண்டு. அதேபோன்று குறுகிய காலத்திற்கு பேச்சு மூலம் சில நாணயமான முடிவுகளைக் கடைப்பிடித்தலும் ஒருவகை சட்டம் போன்றவைதான்.

வடக்கு கிழக்கில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசேட க. பொ. த. உயர்தரப் பரீட்சை சிறிலங்கா கல்வி திணைக்களத்திற்கும், சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும் இடையில் பல முறை பேசப்பட்டு எடுக்கப்பட்ட முடிவாகும். இப்பேச்சுக்களின்போது பரீட்சைக்கு இடைஞ்சலாக தாம் இருக்கப்போவதில்லை என ஆயுதப்படையினர் உறுதி கூறியிருந்தனர்.

ஆனால, கடந்த இருநாட்களாக பரீட்சை நடைபெறும் யாழ் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஒப்புக்கொண்ட சிறிலங்கா அரசாங்கம் அதற்கு விளக்கம் கொடுத்துள்ளது. யாழ் குடாநாட்டில் அரசாங்கம் அறிவித்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதிலும் ஆங்காங்கே பல இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்ற போதும் க. பொ. த உயர்தரப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறுவதாக சிறிலங்கா பாதுகாப்புச் செயலாளர் சிறில்ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் சிறிலங்கா அரசாங்கம் சட்டம் ஒழுங்கு என்று எதைக் குறிப்பிடுகின்றது. ஊரடங்கு வேளை அமுலில் இருந்தால் மக்கள் வீதிகளில் நடமாடக்கூடாது என்பது சட்டம். ஊரடங்கு வேளையிலும் பரீட்சை நடத்தப்படுவதும், அதை அரசாங்கம் அங்கீகரிப்பதும் என்றால் அது அரசாங்கத்தின் சட்டத்தை அரசாங்கமே மீறிய செயல். அவ்வாறானால் சட்டம் ஒழுங்கை மக்கள் கடைப்பிடிக்கத் தேவையில்லை. இது ஒரு கேலிக்குரிய விடயம் என அரசாங்கமே கருதுகின்றதா?

பரீட்சை மண்டபத்தைச் சுற்றி இரைச்சல் சத்தம் எதுவும் இருத்தல்கூடாது. அவ்வாறான இடங்களில் பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்படக்கூடாது என்பது விதி. ஆனால் குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகொப்டர்களும் பரீட்சை மண்டபங்களுக்கு மேலாகப் பறந்து செல்வதற்கும், வட்டமிடுவதற்கும் அருகில் உள்ள பிரதேசங்களில் குண்டுமாரி பொழிவதற்கும் சிறிலங்காவின் இன்றைய சட்டங்கள் அனுமதி அளிக்கின்றன. அவ்வாறாயின் மேற்கூறிய விதி ஏன்?

இலங்கையில் இன்று சட்டங்கள் கேலிக்குரியனவாகிவிட்டது. இதற்குச் சிறிலங்கா அரசாங்கமே பொறுப்பு. சட்டங்கள் அதிகாரத்தில் உள்ளோரைப் பாதுகாப்பதற்கும், மக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஆக்கப்படுபவையல்ல. மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களின் உரிமையை வழங்குவதற்காகவும் ஆக்கப்படுபவையாகும். இந்நிலையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்காத சட்டங்களை மக்கள் ஒருபோதும் மதித்து நடக்கப்போவதில்லை.

---

கமநல சேவை திணைக்களத்திற்கு

# விமானக் குண்டு வீச்சால்

# பல லட்சம் ரூபா நட்டம்

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டில் விமானக்குண்டு வீச்சால் யாழ் மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்கள் சேதமுற்றதில் கமநல சேவைகள் திணைக்களத்திற்குபல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருள்களும் கிருமிநாசினிகளும் விதைநெல்களும் நட்டமாகிவிட்டதாக அந்தந்த கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர்கள் தமது மாவட்ட காரியாலயத்துக்கு அறிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்த விமானக்குண்டு வீச்சில் கீரிமலை, வேலணை, புங்குடுதீவு ஆகிய கமநல சேவை பிரதேச நிலையங்கள் முற்றாக அழிந்து போய்விட்டதாக அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று நிலையங்களும் சேதமடைந்ததில் மட்டும் கமநல சேவைத்துறைக்கு முப்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி உடைய பொருள்கள், உபகரணங்கள், கிருமிநாசினிகள் விதைகள் அழிந்து போய் விட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய கமநல சேவை நிலையங்களும் குண்டு வீச்சால் பாதிப்புற்றிருக்கலாம் என நாம் எண்ணுகின்றபோதிலும் இன்னும் துல்லியமான சேத விபரங்கள் எம்மை வந்தடையவில்லை என கமநல சேவைகள் யாழ் மாவட்ட தலைவர் தெரிவித்துள்ளார்.

(லோ)

---

யாழ். பல்கலைக்கழகத்தில்

# விரும்பிய துறையில் கல்வி கற்க ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

விரைவில் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய கல்வி முறை ஆரம்பிக்கப்பட உள்ளது. ஒரு துறையில் பணிபுரியும் அலுவலர், தொழிலாளர் வேறு ஒரு துறையில் தமது அறிவைப் பெற்றுக் கொள்ளும் நாட்டம் உள்ளவர்களாக இருப்பின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் வைக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

இது குறித்து விளக்கம் தரப்பட்டபோது வைத்தியசாலை ஒன்றில் வைத்தியம் செய்யும் வைத்தியருக்கு வரலாறு கற்றுக்கொள்ள ஆர்வம் இருப்பின் அவர் குறிப்பிட்ட ஒரு பத்து வகுப்புகளுக்கு மட்டும் பதிவு செய்து கொண்டு தமக்கு அந்த அறிவை பெற்றுக் கொள்ளலாம். இந்த வகுப்புகள் அனைத்து துறைகளுக்கும் தொடர்ச்சியாக நடாத்தப்படும் என்றும் வகுப்புகள் ஆரம்பமாவதற்கு குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு முன்னதாகவே என்ன துறையில் வகுப்புக்கள் நடாத்தப்பட உள்ளது என்றும் மற்றும் விபரங்களும் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது இதற்கு கல்வித்தகைமைகள் எதுவும் எதிர்பார்க்கப்படவும் மாட்டாது எனவும் கூறப்பட்டது.

(லோ)

---

# உண்மையான கூட்டாட்சி இந்தியாவிற்குத் தேவை

\- கருணாநிதி

(சென்னை)

இந்தியாவில் மாநில சுயாட்சிக்குரிய முழுமையான உண்மையான கூட்டாட்சி முறைதான் தேவை என்றும், அதற்காக அரசியல் சட்டத்தை திருத்தி அமைக்க திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும் என்றும் அக் கட்சியின் தலைவர் மு. கருணாநிதி கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாநில அரசாங்கங்களை கலைப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கு வகை செய்யும் அரசியல் சட்டத்தில் 356-வது பிரிவை நீக்குவதற்கு தி.மு.க. பாடுபடும் என்றும் கருணாநிதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பிரச்சினை பற்றிக் குறிப்பிடும்போது ''இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தை தாம் ஆதரிப்பதாகவும், அதே நேரம் தமிழகத்தில் இலங்கைப் போராளிக் குழுக்களின் வன்முறைச் செயல்களுக்கும், சமூக விரோத காரியங்களுக்கும் தி. மு. க. துணை போகாது'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

மத். கிழக்கு சமாதான மாநாடு

# அமெரிக்காவுடன் சேர்ந்து சோவியத்தும் முயற்சிக்கும்

(மொஸ்கோ)

மத்தியகிழக்கு பிராந்தியத்தின் சமாதான மாநாட்டைக் கூட்ட அமெரிக்காவுடன் இணைந்து சோவியத் முயற்சிகளை மேற்கொள்ளும் என்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர், அமெரிக்க வெளியுறவு செயலர் ஜேம்ஸ் பேக்கரிடம் உறுதியளித்துள்ளார். மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தமது பேச்சுக்களை முடித்துக்கொண்டு ஜேம்ஸ் பேக்கர் சோவியத் போய்ச் சேர்ந்துள்ளார்.

இதேவேளை சமாதானத்திற்கு பதிலாக இஸ்ரேல் ஆக்கிரமித்த அரபுப் பிரதேசங்களை மீட்டுத்தர வேண்டியது அமெரிக்காவின் கடமை என சிரியாவின் வெளிநாட்டமைச்சர் பாருக் சாரல் கூறியுள்ளார்.

---

# அரச சார்பற்ற நிறுவன 45 கோடி ரூபா உதவி

(கொழும்பு)

உள்நாட்டு அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவும் முகமாக 45.33 கோடி ரூபா அன்பளிப்புச் செய்ய கனடாவின் வெளியுறவுச் சர்வதேச அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியம் இலங்கை கனடா அபிவிருத்தி நிதியத்திடம் விரைவில் கையளிக்கப்படும் என சர்வதேச அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

---

இந்தியா மீண்டும் மீண்டும்

# அரசியல் தீர்வை வலியுறுத்தி வருகின்றது

\-வெங்கட்ராமன்

(ஹனோய்)

இலங்கையில் அந்தநாட்டின் சட்ட வரையறைக்குஉட்பட்டு அனைத்துதரப்பு மக்களும் சட்ட பூர்வமான அபிலாசைகளை நிறைவேற்ற அமைதியான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமென்றே இந்தியா மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது என இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

வியட்னாமிற்கு விஜயம் மேற்கொண்டு அங்கு சென்றுள்ள ஆர். வெங்கட்ராமன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேநேரம் பாலஸ்தீன மக்களுக்கு தனிநாடு கிடைக்க வழிசெய்யப்படவேண்டும்என்றும் அம்மக்களின் சுதந்திரம் கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். பாலஸ்தீனமக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை அப்பிராந்தியத்தில் அமைதி நிலைத்திருக்க முடியாது என்றும் கூறினார்.

---

# 70 பேர் மரணம்

(டாக்கா)

பங்களாதேசில் வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவியுள்ளது. சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், புதன்கிழமை மட்டும் சுமார் எழுபது பேர் வயிற்றோட்ட நோயினால் மரணமடைந்ததாகவும் தெரியவருகிறது.

---

# கப்டன் ரசாத் நினைவாக நூல் நிலையம்

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய மாணவன் கப்டன் ரசாத்தின் (சுப்பிரமணியம் சுரேஸ்குமார்) ஞாபகார்த்தமாக கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்க தலைமைக் காரியாலயத்தில் நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

கப்டன் ரசாத்தின் தாயாரான திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் மேற்படி நூல் நிலையத்தை திறந்து வைத்தார். உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு மா. பத்மநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (49)

# சோவியத்தில் வேலை நிறுத்தங்கள் பலவந்தமாக நிறுத்தப்படும்

## -பிரதமர் வலன்ரைன் பவலோ

(மொஸ்கோ)
சோவியத்யூனியனில் புதிய பொருளாதாரத் திட்டத்தை அமுல் செய்வதற்கு ஏதுவாக வேலை நிறுத்தவகள் பலவந்தமாக முடிவிற்குக் கொண்டுவரப்படும் என்று சோவியத் பிரதமர் வலன்ரைன் பவலோ தெரிவித்துள்ளார்.

சோவியத்தின் பாராளுமன்றத்தில் இந்தப் புதிய சட்டத்தை சமர்ப்பித்துப் பேசிய வலன்ரைன் பொது மக்களின் ஆதரவு கிடைத்தால் சோவியத்யூனியனின் பொருளாதாரத்தை இந்தவருட இறுதிக்குள் சீரழிவில் இருந்து பாதுகாத்து ஸ்திரமான நிலையை ஏற்படுத்தமுடியும் என்றும் தெரிவித்தார்.

தொழில்துறை நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு ஏதுவாக பொருளாதாரம் மற்றும் சந்தை நிர்வாக முறைகளை ஒத்திவைத்தல், போட்டி நிலையை ஏற்படுத்துதல். மூன்றிலொரு சிறு கைததொழில்களை தனியார் மயப்படுத்தல் ஆகிய திட்டங்கள் இதில் அடங்கியிருக்கிறது என்று பிரதமர் வலன்ரைன் கூறினார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி கொர்பசேவ் தலைமைப் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய முன்வந்தார். ஆனால் கட்சியின் பிரதிநிதிகள் இதனை ஏகமனதாக மறுத்துள்ளனர். தாம் ராஜினாமாச் செய்ய உள்ளதாக கொர்பசேவ் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தெரிவித்தார் என பி. பி. ஸி. தெரிவித்தது

# அத்வானிக்கு எதிராக டில்லியில் ராஜேஸ்கன்னா

(டில்லி)
இந்தியத் தலைநகரில் புதுடில்லி லோக் சபைத் தொகுதியில் பிரபல சினிமா நடிகர் ராஜேஸ் கன்னா போட்டியிடுகிறார். பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல் கே. அத்வானிக்கெதிராக ராஜேஸ் கண்ணாவை வேட்பாளராக இந்திரா காங்கிரஸ் நிறுத்தியுள்ளது புதுடில்லித் தொகுதியில் போட்டியிடும் எல்.கே. அத்வானி குஜராத் மாநிலம், காந்திநகர்த் தொகுதியிலும் போட்டியிடுகிறார்.

தெற்கு டில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக முன்னாள் தொழில் நிலை ஆளுநர் ரமேஸ் பண்டாரி போட்டியிடுகிறார்.

**மீன பாக்கத்தில**

# கடலோரக் காவற்படையின் இரண்டாவதுவிமானத்தளம்

(சென்னை)
இந்தியாவின் கடலோரக் காவற்படையின் இரண்டாவது விமானத்தளம் நேற்று சென்னை மீனம்பாக்கததில் செயற்படத் தொடங்கியது. இத்தளம் 29 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது.

விமானத்தளத்தைத்திறந்து வைத்துப்பேசிய தரைக் காவற்படையின் தலைமை இயக்குநா வயிஸ் அட்மிரல் லட்கார், பாக்குநீரிணையின் வழியாகக் கடத்தலையும், சட்டவிரோதமாகக்குடியேறுவதையும் தடுப்பதே இதன் முக்கிய நோக்கம் என்றார்.

இந்த ஆண்டில் கடத்தல் ஒழிபபு நடவடிக்கைகள்மூலம ரூபா 34 கோடி மதிப்புள்ள தங்கத்தையும், வெள்ளியையும் தரைக் காவற்படை கைப்பற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
முதலாவது கடலோரக் காவற்படைத்தளம் டமனில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### தமிழக

லங்கா கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு சுடப்பட்டனர். என்றும் ஐந்து பேர்களுடன் சென்றபடகு பெருமளவில் சேதப்படுத்தப்பட்டதாகவும் தமிழக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவதில் இருந்து தமக்கு பாதுகாப்பு அளித்திட வேண்டும் என ராமேஸ்வரம் மீனவர் சங்கத்தினர்தமிழக ஆளுநர் பீஷ்மநாராயணசிங்கிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தச் சங்கம் ஆளுநருக்கு அளித்துள்ள மனுவொன்றில் சிறிலங்கா கடற்படையினரின் அச்சுறுத்தலால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும். ஆகவே ஆளுநர் இதப் பிரச்சினையில் தலையிட்டு அதனை தீர்த்து வைக்கும்படி கேட்டுள்ளனர்.

### மட்டக்களப்பில்

யில தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரண்டு தமிழ்ப் பொதுமக்களின் அடையாளங் காணப்படாத சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.


## மரண அறிவித்தல்

### திரு. இராசா இராசாத்தினம்
(மலாயன் பென்சனியர்)

கொக்குவில் குளப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இராசா இராசரத்தினம் சங்கானையில் காலமானார். இவர் காலஞ்சென்ற மசேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பத்மா செல்வரட்ணம், தையல்நாயகி, பரந்தாமன், கமலநாயகி துரைலிங்கம், மகாதேவன், சகாதேவன் (Hindu Board of Education) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் 25.04.91 வியாழக்கிழமை காலை சங்கானையில் நடைபெறறது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
சகாதேவன்

]B 2431)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### வன்னியில்

ஆலய சந்தியிலிருந்து பேரணி ஆரம்பமாகி மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்ததும் குறிப்பிட்டபடி பொதுக் கூட்டமும், கலை நிகழ்வுகளும் நடைபெறும். வவுனியா மாவட்டத்தில் பன்றிக்கெய்தகுளம் சந்தியிலிருந்து பேரணி ஆரம்பமாகி ஓமந்தை மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்ததும் குறிப்பிட்டபடி பொதுக் கூட்டமும் கலை நிகழ்வும் இடம் பெறும்.

மேதின நிகழ்வுகளில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள். இதற்கான முன்னேற்பாடுகளை விடுதலைப் புலிகள் மககள்முன்னணியின் பல்வேறு பிரிவுகளும் கூட்டாக ஒழுங்கமைத்துள்ளன.

இந்த எழுச்சி நிகழ்வுகளில் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வன்னிப் பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மனோ அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அதிகளவு

டம் கௌரவிக்க பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம் தீர்மானித்துளளது. இவ்வகையில் அதிகளவு பதநீரை உற்பத்திசெய்த முதல் மூன்று தொழிலாளருக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் பதக்கங்கள் மேதினத்தன்று வழங்கப்படவுள்ளன.

### மேதின

பட்டு வருகின்றன. நேற்று மாலை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலடியில் ''மேதின அறை கூவல்' என்ற தெருக்கூத்து நடைபெற்றது. விடுதலைப் புலிகள் மாணவர்இயக்க உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியைத் தயாரித்து நிகழ்த்தினர்.

### காவலூரிலும்

வெளியேற முயன்றனர். வெளியேறமுயன்ற இராணுவத்திற்கு உதவியாக இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு ஹெலிகள், ஒரு அவ்ரோ விமானம் ஆகியன தாக்குதலை மேற்கொண்டன. அதேவேளை கடற்படைக் கப்பல்களில் இருந்து பீரங்கித் தாக்குதலும், பலாலி இராணுவததளத்தில் இருந்து ஆட்லறி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளபபட்டது.

இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும செய்திகள் தெரிவிக்கின்றபோதிலும்சரியான எண்ணிக்கை தெரியவரவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் மூன்றுபுலிகள் வீரமரணம் அடைந்தனர்.

அதேவேளை நாரந்தனையில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நாலவர் கொல்லப்பட்டதும். ஐவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

### ஆசிரியர்

கல்வி, உயர்கல்வி அமைச்சர் அத்துலத்முதலி சர்வதேச ஆசிரியர் தினத்தன்று சம்பள விகித மாற்றம் குறித்தும் மற்றும் பல யோசனைகள் குறித்தும் அறிவிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

# குர்ஆனின் அடிப்படையில் பாகிஸ்தானில் ஆட்சி

(இஸ்லாமாபாத்)
இஸ்லாமிய சட்டத்தின்படி பெண்கள் நாட்டை ஆளமுடியாது என பாகிஸ்தான் சட்டத்துறை சிற்றமைச்சர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் மாணவர்களையும், பெண்களையும் தனித்தனியே பிரிக்க ஷிரியத் சட்டம் வகுக்கப்படும் என்றும் புனித குர் ஆனின் அடிப்படையில் நபிகள் நாயகத்தின் கோட்பாடுகளுக்கிணங்க பாகிஸ்தானின் அரசியல் அமைப்பு திருத்தப்படும் என்றும் அறிவித்தார்.

இதற்காக ஒரு சட்ட முன்மொழிவு தேசிய சட்டமா மன்றத்தில் முன்வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். பாகிஸ்தானை இஸ்லாமிய பொதுநல நாடாக்கும் வகையில் ஏற்கனவே சில சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## தமிழக மாநில அரசு கலைப்பு

# புலிகள் நடவடிக்கையை கட்டுப்படுத்த உதவியது

## -பீஷ்ம நாராயண சிங்

(சென்னை)
திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்படுவதற்கு முன்னர் விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் பகிரங்கமாகத் தமது ஆயுதங்களை இடத்துக்கு இடம் எடுத்துச் சென்றார்கள் மாநில அரசு கலைக்கப்பட்ட பின்னர் ஆயுதங்களை மறைத்து வைபபதற்கும், அவற்றைக கூடியவரை இலங்கைக்குக் கொண்டுசெல்வதற்கும் எத்தனித்தார்கள் என்றுதமிழ்நாடுஆளுநர் பீஷ்ம நாராயண சிங் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

மாநில அரசு கலைக்கப்பட்டகற்குப் பின்னர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருந்தது.

தம்மை அகதிகள் என்று கூறிக்கொண்டு தமிழ் நாட்டுக்குள் பிரவேசித்து, இருப்பிட வசதிகளையும், ஏனைய வசதிகளையும் பெற்றிருந்த பெருமளவு போராளிகள் தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

# சாக்குவில் நகரிலிருந்து ஈராக் படை வெளியேறியது

(நியூயோர்க்)
ஈராக்கின் வடக்கு நகரான சாக்குவிலை விட்டுதமது இராணுவத்தினர் விலகி விட்டனர் என்றும், 50 பொலிசார் மட்டுமே அங்கு இருப்பதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

நேற்று ஐ. நா. விற்கான ஈராக்கிய தூதுவர் அப்துல் அமீர் அன்சாரி இத் தகவலை வெளியிட்டார். பஸ்மூலமாகவும், ட்ரக் மூலமாகவும் அங்கிருந்து ஈராக்கிய ராணுவத்தினர் பாகதாத் திரும்புவதாக பி. பி. ஸி அறிவித்தது.

முன்னதாக அமெரிக்காதலைமையிலான கூட்டணி நாடுகள் வட பகுதியில் இருந்து ஈராக்கிய இராணுவத்தினர் இவ்வார இறுதிக்குள் வெளியேறிவிடவேண்டும் என்றும் வெளியேறாவிட்டல் தேவையேற்படும் பட்சத்தில் தமது படைகள் பலாத்காரத்தையும் உபயோகிக்கும் என்றும் எச்சரித்திருந்தது.

இதேவேளை ஈராக் தனது அணுசக்தி ஆயுதங்கள் குறித்து ஐ. நா. சபைக்கு அளித்துள்ள தகவல் போதுமானதாக இல்லை என்றும், ஆகையால் ஈராக் அது தொடர்பாக மேலும் தகவல் அளிக்குமாறும் சர்வதேச அணுசக்தி அமைப்பு கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் ஈராக்கிய பிரதம மந்திரி தம்மிடம் அணு ஆயுதம் இல்லை எனத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

## மலரஞ்சலியும் நினைவஞ்சலியும்

(யாழ்ப்பாணம்)
தந்தை செல்வாவின் பதின்நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பொதுக் கூட்டமொன்று நேற்று அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இரவு ஏழு மணியளவில் ஆரம்பமான இககூட்டத்தில் நல்லூர் வட்டஅவைத்தலைவர்சு. கணபதிப்பிள்ளை அவர்கள் உட்படப் பலர் உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் இளம் சந்ததியினருக்குத் தந்தைசெல்வா தீர்க்கதரிசனத்துடன் கூறிய அறிவுரைகளும், தமிழீழத் தனியரசில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை குறித்தும் அனைத்து பேச்சாளர்களினாலும் எடுததுரைக்கப்பட்டது. இதேவேளை நேற்றுக்காலை தந்தை செல்வாவின் ஸ்தூபியில் மலரஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. (லோ(

### இரண்டாம்

இராணுவத்தினர் நிலை கொணடுள்ளதுடன் பொது மக்களின் வீடுகள், வேலிகள் போன்றவற்றை சில இடங்களில் தீயிட்டும், சொத்துக்களை சூறையாடியும் வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.ஒரு தொகுதி மக்கள் இந்தப்பகுதியில் உள்ள ஆலயங்களிலும், சில வீடுகளிலும் அடைக்கலம் தேடியிருந்தனர். இவர்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டமையால் அந்தப் பகுதியில் இருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளனர்

அதேவேளை இராணுவத்தினர் காரைநகரில் எஞ்சியுள்ள பகுதிகளை தமது பிடிக்குள் கொண்டுவருவதற்கு முயற்சித்தவண்ணமிருந்தனர். படையினருக்கு உதவியாக கடலில் இருந்து பீரங்கிப்படகுகளும். வானில் இருந்து ஹெலிகொப்டர் ஒன்றும் இடையிடையே குண்டுத்தாக்குதல்களை நடாத்தின.நேற்று முன்தினம மாலையும், இரவும்

# இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுச் சகல போதனாசிரியர்களுக்கும், பத்திரிகைத்துறைப் பயிற்சியாளர்களுக்கும், எல்லா முதலுதவி நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்குமான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது. இதற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் சமுகமளிக்குமாறு தொழில் நுட்பக்கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ச)

சில பொதுமக்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கடல்வழியாக பொன்னாலைப்பகுதியை வந்தடைந்தனர். (க) (20)